தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

சனிக்கிழமை, 1973 நவம்பர் 24.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

Lady Willingdon Training College, Madras

* 91. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Education be pleased to state the special constructions to be erected at the Lady Willingdon Training College, Madras in connection with its Golden Jubilee in 1973?

வெலிங்டன் சீமாட்டி பயிற்சிக் கல்லூரி, சென்னை.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னையிலுள்ள வெலிங்டன் சீமாட்டி பயிற்சிக் கல்லூரியில், அக்கல்லூரியின் பொன்விழாவினையொட்டி, 1973-ஆம் ஆண்டில், கட்டப்படவிருக்கிற சிறப்புக் கட்டுமானங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பொன்விழாவை ஒட்டிக் கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு எதுமில்லை.